நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர்!

06.02.2026 நிகழ்வுகள்

கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகள்!

1. விசைத்தறி உற்பத்தியாளர்களின் வருமான இழப்பு - தகுந்த நடவடிக்கையை உறுதி செய்யுமா ஒன்றிய அரசு?

அந்தியூர் பி. செல்வராசு

தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டத்தில் உள்ள கைத்தறி நெசவாளர்கள், கைத்தறிக்கென ஒதுக்கப்பட்ட பொருட்களுக்குச் சட்டப்பூர்வப் பாதுகாப்பு இருந்தபோதிலும், விசைத்தறி பொருட்களின் விலையில் போட்டியின் காரணமாக உற்பத்தி தேவை மற்றும் வருமானத்தையும் இழக்கின்றனர் என்பது குறித்து நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். கைத்தறி முத்திரைகளை மீறுவதையும் தவறாகப் பயன்படுத்துவதையும் தடுக்க, கடந்த மூன்று ஆண்டுகளில் அந்த மாவட்டத்தில் எடுக்கப்பட்ட அமலாக்க நடவடிக்கைகளின் விவரங்கள் யாவை? சட்டப்படியான உற்பத்தியை உறுதி செய்வதற்கும் உண்மையான கைத்தறி நெசவாளர்களுக்குப் பயனுள்ள பாதுகாப்பை வழங்குவதற்கும் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் யாவை? எனவும் அவர் கேட்டுள்ளார்.

2. உணவு பதப்படுத்துதல் துறையில் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கிய நிதி எவ்வளவு?

என்.ஆர். இளங்கோ

இந்தியாவின் மொத்த உணவு பதப்படுத்துதல் உற்பத்தியில் தமிழ்நாடு ஏறக்குறைய 8 சதவீதம் பங்களித்து நாட்டில் உணவு பதப்படுத்துதலில் இரண்டாவது இடத்தில் உள்ளது என்பதை சுட்டிக்காட்டி கடந்த ஐந்து நிதியாண்டுகளில் பல்வேறு உணவு பதப்படுத்துதல் திட்டங்களின் கீழ் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த மத்திய நிதியின் அளவு என்ன என திமுக எம்.பி. என்.ஆர். இளங்கோ மாநிலங்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

3. நிலுவையில் உள்ள இரயில்வே திட்டங்கள் - தாமதன் ஏன்?

பி. வில்சன்

சென்னை மாஸ் ரேபிட் டிரான்சிட் சிஸ்டம் (எம்.ஆர்.டி.எஸ்) மற்றும் சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் (சி.எம்.ஆர்.எல்) ஆகியவற்றுக்கு இடையே எம்.ஆர்.டி.எஸ்-ஐ கையகப்படுத்தி ஒருங்கிணைப்பதற்காக கையெழுத்திடப்படவிருந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) இறுதி செய்யப்பட்டுள்ளதா எனவும் அந்த இணைப்புத் திட்டத்தின் தற்போதைய நிலை மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதில் ஏற்பட்ட தாமதத்திற்கான காரணங்கள் கேட்டு திமுக மாநிலங்களவை உறுப்பினர் பி. வில்சன் கேள்வி எழுப்பியுள்ளார். 01.02.2026 நிலவரப்படி தமிழ்நாட்டில் நிலுவையில் உள்ள இரயில்வே திட்டங்களின் விவரங்கள், அதற்காக ஒதுக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை, தற்போதைய நிலை, மற்றும் தாமதத்திற்கான காரணங்கள் யாவை? ஆத்திப்பட்டு-கும்மிடிப்பூண்டி பிரிவில் கூடுதல் பாதை விரிவாக்கத்திற்காக புதிய டெண்டர் கோர முன்மொழியப்பட்டுள்ளதா எனும் கேள்விகளையும் அவர் முன்வைத்துள்ளார்.

4. தமிழ்நாட்டில் பிரதம மந்திரி கிசான் சம்பதா யோஜனா திட்டத்தின் கீழ் உள்ள திட்டங்கள்

ஆர். கிரிராஜன்

வேளாண் பதப்படுத்துதல் மற்றும் உணவுப் பரிசோதனை ஆய்வகங்கள் திட்டம், மெகா உணவுப் பூங்காக்கள் திட்டம் ஆகியவற்றின் கீழ் செயல்பாட்டில் உள்ள திட்டங்கள் குறித்து திமுக மாநிலங்களவை உறுப்பினர் ஆர். கிரிராஜன் கேள்வி எழுப்பியுள்ளார்.

பிரதம மந்திரி கிசான் சம்பதா யோஜனா (PMKSY) திட்டத்தின் கீழ் அதிக நிதி ஒதுக்கீடு செய்வதற்கும் திட்டங்களை நிறுவி செயல்பாட்டிற்குக் கொண்டுவரத் தேவையான சட்டப்பூர்வ அனுமதிகளை பெறுவதற்கும் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என கேள்வி எழுப்பினார்.

5. இயற்கை உரங்கள் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கான திட்டங்கள் என்ன?

டாக்டர் கனிமொழி சோமு

யூரியா, டீசல் எக்ஸாஸ்ட் ஃப்ளூயிட் (DEF) உரங்களுக்குப் பதிலாக, இயற்கை உரங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட திட்டங்கள் குறித்து டாக்டர் கனிமொழி சோமு கேள்வி எழுப்பியுள்ளார். அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:

இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பதற்காக விவசாயிகளுக்கு நிதி உதவி மற்றும் பயிற்சி அளிக்க அரசாங்கத்தால் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளின் மாநில வாரியான விவரங்கள் யாவை? இயற்கை விவசாயத்தின் மூலம் விவசாயிகளால் உற்பத்தி செய்யும் தானியங்களைக் கொள்முதல் செய்ய அரசாங்கம் வகுத்துள்ள திட்டங்கள் யாவை? இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பதற்கான அரசாங்கத்தின்திட்டத்தின் விவரங்கள் யாவை? என கேள்வி எழுப்பினார்.

6. எண்ணெய் வித்துக்களுக்கான இறக்குமதி வரியை அதிகரித்திடுக!

எஸ். கல்யாணசுந்தரம்

இறக்குமதி வரிகள் குறைவாக உள்ள காரணத்தால் உள்நாட்டு எண்ணெய் வித்து விவசாயிகள் மற்றும் பதப்படுத்துபவர்களைப் பாதுகாக்கும் வகையில், சமையல்/தாவர எண்ணெய்கள் மீதான இறக்குமதி வரிகளை அதிகரிக்க வேண்டும் எனும் கோரிக்கைகள் மீது அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்று திமுக மாநிலங்களவை உறுப்பினர் எஸ். கல்யாணசுந்தரம் கேள்வி எழுப்பியுள்ளார். நுகர்வோர் விலைகளைக் குறைக்கவும், சுத்திகரிப்புத் தொழிலுக்கு ஆதரவளிக்கவும், கச்சா சமையல் எண்ணெய்கள் மீதான சுங்க வரியை குறைப்பது உட்பட, சமீபத்திய வரித் திருத்தங்களுக்கான காரணங்கள் என்ன? தற்போதைய கட்டண அமைப்பு உள்நாட்டு எண்ணெய் வித்து உற்பத்தி, இறக்குமதி மற்றும் விலை ஏற்ற இறக்கங்கள் மீது ஏற்படுத்தும் தாக்கம் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

7. தமிழ்நாட்டிற்கான நூறு நாள் வேலைத் திட்டத்தின் நிலுவைத் தொகையை எப்போது விடுவிக்கும் ஒன்றிய அரசு?

ராஜாத்தி சல்மா

ஜனவரி 2026 நிலவரப்படி, தமிழ்நாடு உட்பட மாநிலங்களுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரகவேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் (MGNREGS) கீழ் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகைகளின் தற்போதைய நிலை என்ன? என்றும் தமிழ்நாட்டிற்குச் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகைகளை விடுவிப்பதற்கான முன்மொழியப் பட்ட காலக்கெடு என்ன? என்றும் திமுக மாநிலங்களவை உறுப்பினர் ராஜாத்தி சல்மா கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் கிராமப்புறங்களில் தரமான சாலைகளை உருவாக்கும் பிரதான் மந்திரி கிராம சதக் யோஜனா-IV (PMGSY-IV) திட்டத்தின்கீழ் கண்டறியப்பட்ட 40547 பகுதிகளில், தமிழ்நாட்டில் வெறும் ஐந்து குடியிருப்புகள் மட்டுமே தகுதியுள்ளவையாகக் கண்டறியப்பட்டுள்ளன என்பது உண்மையா என்று ராஜாத்தி சல்மா எம்.பி. தனது மற்றொரு கேள்வியில் குறிப்பிட்டுள்ளார். தற்போதுள்ள சாலைகளைத் தரம் உயர்த்துதல், புதுப்பித்தல் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்குத் தொடர்ந்து நிதி வழங்குமாறு மாநிலங்களிடமிருந்து அமைச்சகத்திற்கு வந்த கோரிக்கைகளின் நிலை என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் குறைதீர்வு நாள் கூட்டரங்கம் (GDP Hall) நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் (Sports Kit) வழங்கும் விழாவில் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி. கலந்து கொண்டு வழங்கினார். உடன் RDO தனலிங்கம், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் ஞானசேகரன் நகர, பேரூராட்சி மன்ற தலைவர்கள் ஹரிணி, தில்லை தமிழ் செல்வி, அசோகன், தேவி, பெண்ஸ் பாண்டியன், லட்சுமி, பாரிகுல்சார்அகமது, எஸ்.நாகராஜன், கவிதா சீனிவாசன், லதா, நரசிம்மன், பேரூர் செயலாளர் பாஸ் என்கிற நரசிம்மன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத்.MC மற்றும் பலர் பங்கேற்றனர்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் வருகிற 14ந்தேதி தி.மு.க. மண்டல மாநாடு நடக்கும் இடத்தை நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் சென்று ஆய்வு செய்தார். உடன் அண்ணாதுரை எம்.பி., மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ., நல்லதம்பி எம்.எல்.ஏ. மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

தமிழ்நாட்டில்

மகளிர் தங்கும் விடுதிகள் கட்டுவதற்கு ஒதுக்கிய நிதி எவ்வளவு?

மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, பிப்.8-

தமிழ்நாட்டில் பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதிகள் கட்டுவதற்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் D.M.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

தற்போது நாட்டின் பல்வேறு மாநிலங்களில் பணிபுரியும் பெண்களுக்கான தங்கும் விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

பல்வேறு பகுதிகளில் அதிக தங்கும் விடுதிகளை கட்ட ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதா?

அப்படியானால், தமிழ்நாடு உட்பட, மாவட்ட வாரியாக, நாட்டின் பல்வேறு பகுதிகளில், எந்தெந்த மாவட்டங்களில் இந்த தங்கும் விடுதிகள் திறக்கப்பட உள்ளன என்ற விவரங்கள் தருக?

நாட்டில் பணிபுரியும் மகளிர் விடுதிகளை (WWHs) நிறுவுவதற்கு ஒன்றிய அரசாங்கம் ஏதேனும் நிதி வழங்கியுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள், மாநில வாரியாக; தருக.

ஒன்றிய அரசு நாடெங்கும் உள்ள 28 மாநிலங்களில் புதிய (WWHs) பணி புரியும் மகளிர் விடுதிகள் கட்டுமானத்திற்காக ரூ.5000 கோடி ஒதுக்கீடு செய்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள், மாநில வாரியாக, ஆண்டு வாரியாக தருக?

நாட்டில் உள்ள மொத்த WWH களின் எண்ணிக்கை, மாநில வாரியாக, ஒன்றிய அரசு ஏதேனும் ஆய்வு/மதிப்பீடு செய்திருக்கிறதா? அப்படியானால், அதன் விவரங்கள்; மற்றும்

ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் பணிபுரியும் மகளிர் விடுதிகளை நடத்த பொது/தனியார் நிறுவனங்கள்/நிறுவனங்கள்/என்ஜிஓக்கள் அங்கீகரிக்கப் பட்டதா?/ அனுமதிக்கப்படுகிறதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

ஒன்றிய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி எழுந்து மூலம் அளித்த பதில் விவரம் கீழ்வருமாறு:

சகி நிவாஸ் திட்டம் [பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதி (WWH)] என்பது, ஒன்றிய அரசு வழங்கும் திட்டமாகும், இதில் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் உள்ளூர் தேவைகளுக்கு ஏற்ப மதிப்பீடு செய்து மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுடன் கலந்துரையாடிய பிறகு திட்ட ஒப்புதல் வாரியத்தால் (PAB) ஒப்புதல் அளிக்கப்படும். பணிபுரியும் பெண்களுக்கும், உயர்கல்வி மற்றும் பயிற்சி பெறும் பெண்களுக்கும் பாதுகாப்பான மற்றும் வசதியான தங்குமிடங்கள் கிடைப்பதை ஊக்குவிப்பது, நகர்ப்புற, அரை நகர்ப்புற மற்றும் பெண்களுக்கு வேலை வாய்ப்பு உள்ள கிராமப்புறங்களில் உள்ள குழந்தைகளுக்கு பகல் நேர பராமரிப்பு வசதிகளை வழங்குவதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த திட்டத்தில், வாடகைக்கு தங்குவதற்கு நிதி வழங்கப்படுகிறது. சகி நிவாஸ் அமைப்பதற்கு மாநில அரசுகள்/யூடி நிர்வாகங்கள் நிதி உதவி பெற தகுதியுடையவை.

தற்போது, தமிழ் நாடு உட்பட நாடு முழுவதும் 560 சகி நிவாஸ் (வேலை செய்யும் பெண்கள் தங்கும் விடுதி) செயல்பட்டு வருகிறது. நாடு முழுவதும் செயல்படும் சகி நிவாஸ் (WWH) விவரங்கள் இணைப்பு இல் உள்ளன. அதன்படி தமிழ் நாட்டில் மட்டும் 60 பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதிகள் செயல்பட்டு வருகிறது.

15வது நிதிக்குழு காலத்தில் சகி நிவாஸ் திட்டத்தின் கீழ் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு வெளியிடப்பட்ட நிதி விவரங்கள் இணைப்புII இல் உள்ளன. அதன்படி தமிழ் நாட்டில் பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதிகள் கட்டுவதற்கு ரூ. 107.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

நிதி அமைச்சகம் (MoF), செலவினத் துறை (DoE) ஓ.எம். 09.08.2024 தேதியிட்ட எண். 44(1)/PFS/202425 (CAPEX) பெண்களுக்கான மூலதன முதலீட்டுத் திட்டத்திற்கான (SASCI) பெண்களுக்கான சிறப்பு உதவியின் (SASCI) பகுதி (X) (பணிபுரியும் பெண்கள் விடுதிகள் கட்டுமானம்) கீழ் 28 மாநிலங்களுக்கு ரூ.5,000/ கோடிகளை ஒதுக்கீடு செய்துள்ளது.

SASCI திட்டத்தின் கீழ், செலவினத் துறை (DoE) 28 மாநிலங்களில் மொத்தம் ரூ.4,826.31 கோடியில் மொத்தம் 52991 படுக்கைகள் கொண்ட 254 பணிபுரியும் பெண்கள் தங்கும் விடுதிகளை நிர்மாணிக்க ஒப்புதல் அளித்துள்ளது. இதில் முதல் தவணையாக ரூ.3,148.28 கோடி மாநிலங்களுக்கு 25.2024 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது. இணைப்புIII இல் இதன் விவரங்களைக் காணலாம். அதன்படி தமிழ் நாட்டில் ரூ. 223 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ. 147.18 கோடி விடு விக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களில்

ஜல்சக்தி மையங்களை ஒன்றிய அரசு வலுப்படுத்துமா?

மக்களவையில் கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, பிப். 8-

மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி. என். அண்ணா துரை எழுப்பிய கேள்வி வருமாறு

(அ) நாட்டில் ஜல் சக்தி மையங்களை (JSKs) அரசு நிறுவியுள்ளதா, அப்படியானால், பஞ்சாப் மற்றும் தமிழ்நாடு உட்பட மாநில/யூனியன் பிரதேச வாரியாக, மாவட்ட வாரியாக அதன் விவரங்கள் மற்றும் இது வரை பஞ்சாபில் JSKs அமைப்பதற்காக அனுமதிக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப் பட்ட நிதியின் விவரங்கள்;

(ஆ) பஞ்சாபின் அனைத்து மாவட்டங்களிலும் நடந்து வரும் JSKs எந்த நேரத்தில் முடிக்கப்படும்/செயல்பட வாய்ப்புள்ளது;

(இ) தமிழ்நாட்டின் கிராமப்புற மற்றும் அரை நகர்ப்புறங்களில் நீர் பாதுகாப்பு, மழைநீர் சேகரிப்பு மற்றும் நிலத்தடி நீர் ரீசார்ஜ் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக இந்த JSKs மேற்கொண்ட நடவடிக்கைகளின் விவரங்கள்;

(ஈ) இந்த JSKsகளின் நீண்டகால நிலைத்தன்மையை உறுதி செய்வதற்காக அவற்றின் செயல்பாடு, திறன் மேம்பாடு மற்றும் பராமரிப்புக்காக அர்ப்பணிக்கப்பட்ட நிதியை ஒதுக்க அரசாங்கம் முன்மொழிகிறதா, அப்படியானால், அதன் விவரங்கள்;

(இ)தமிழ்நாட்டில் விழிப்புணர்வைப் பரப்புவதிலும் உள்ளூர் நீர் மேலாண்மை நடைமுறைகளை மேம்படுத்துவதிலும் JSKகளின் செயல்திறன்; மற்றும்

(f) தமிழ்நாட்டின் கால நிலை பாதிப்புக்குள்ளான மற்றும் வறட்சி பாதிப்புக்குள்ளான மாவட்டங்களில் JSKகளை விரிவுபடுத்த அல்லது வலுப்படுத்த அரசு முன்மொழிகிறதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

இவ்வாறு சி.என். அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

தஞ்சை கு. சுல்தான் மொய்தீன்

பிப்ரவரி 8 (2009)

தி.மு.க. தலைமைப் பொதுக்குழு உறுப்பினராக நான்கு முறையும் – தலைமைச் செயற்குழு உறுப்பினராக ஒரு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

மூன்று முறை தஞ்சை நகர்மன்ற உறுப்பினராகவும், மூன்று முறை நகரமன்றத் துணைத் தலைவராகவும் தொடர்ந்து தூய பணியாற்றியதன் பலனாக 2001ஆம் ஆண்டு நகர் மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தஞ்சை மக்கள் போற்றும் வண்ணம் பணியாற்றியவர்.

2001ஆம் ஆண்டு தமிழக அரசின் சார்பில் இவரது மனிதநேயமிக்க தொண்டினைப் பாராட்டி முதல்வர் கலைஞர் அவர்கள் "கோட்டை அமீர்" விருது வழங்கினார்.

தலைமைக் கழகம் சார்பில் 2004ஆம் ஆண்டு "கலைஞர் விருது" தலைவர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.